பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 06 2024 **SATURDAY** 6 45 **AM**

வணக்கம். மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- டெல்டா விவசாயிகளுக்கான குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் 2 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் விதைகள் மானிய விலையில் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

- தேசிய ஜனநாயக கூட்டணியின் மூன்றாவது ஆட்சியிலும் தமிழகத்திற்கு ஏராளமான திட்டங்கள் கிடைக்கும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

- பெண்கல்வியின் அவசியம் குறித்து ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்று மாநில மகளிர் ஆணையத் தலைவர் திரு. குமாரி கேட்டுக் கொண்டுள்ளார்

- தமிழகத்தில் மீன்பிடி தடை காலம் நிறைவடைந்ததை அடுத்து, இன்று காலை மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

- உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது கடைசி லீக் ஆட்டத்தில் கனடா அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

டெல்டா விவசாயிகளுக்கான குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் 2 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் விதைகள் மானிய விலையில் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

டெல்டா விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில் 78 கோடியே 67 லட்சம் ரூபாய் செலவில் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டத்தை தமிழக அரசு நேற்று அறிவித்தது.

இதுதொடர்பாக வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேட்டூர் அணையில் போதிய நீர் இல்லாததன் காரணமாக, டெல்டா சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு இந்த திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ், 2ஆயிரம் மெட்ரிக் டன் நெல் விதைகள் மானிய விலையில் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலமாக வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வேளாண் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஏற்பட்டுள்ள வேலைவாய்ப்பு இழப்பினை ஈடு செய்யும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாயப்பு உறுதி திட்டத்தின்கீழ், வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தேசிய ஜனநாயக கூட்டணியின் மூன்றாவது ஆட்சியிலும் தமிழகத்திற்கு ஏராளமான திட்டங்கள் கிடைக்கும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சராக தொடர்ந்து இரண்டாவது முறையாக பொறுப்பேற்ற பின்னர், நேற்று சென்னை திரும்பிய அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசினார்.

ஊடகங்கள் தமக்குள்ள பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும் என்றும் உறுதிப்படுத்தப்பட்ட செய்திகளை மட்டுமே வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

குவைத் தீ விபத்தில் படுகாயமடைந்த மேலும் ஒரு இந்தியர் உயிரிழந்ததை அடுத்து இந்த விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 50ஆக அதிகரித்துள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்த தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகேயுள்ள வானரமுட்டி கிராமத்தைச் சேர்ந்த மாரியப்பனின் உடல் நேற்று, கொச்சியிலிருந்து தூத்துக்குடி கொண்டுவரப்பட்டது.

அவரது உடலுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அஜய் சீனிவாசன், கோட்டாட்சியர் ஜோன் கிறிஸ்டிபாய், நகராட்சித் தலைவர் திரு. கருணாநிதி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் மாரியப்பன் உடல் தகனம் செய்யப்பட்டது.

இதேபோல், தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி அருகேயுள்ள ஆதனூர் கிராமத்தைச் சேர்ந்த பொறியாளர் புனாப் ரிச்சர்டு ராயின் உடல் நேற்றிரவு சொந்த ஊருக்கு கொண்டு வரப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் திரு. தீபக் ஜேக்கப் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி பெற்றோர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை குடும்பத்தினரிடம் ஆட்சியர் வழங்கினார்.

>>>>><<<<<

பெண் குழந்தைகள் கல்வி கற்க வேண்டியதன் அவசியம் குறித்து ஆசிரியர்கள், அவர்களின் பெற்றோர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்று மாநில மகளிர் ஆணையத் தலைவர் திரு. குமாரி கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படும் ஒருங்கிணைந்த சேவை மையம், முதியோர் இல்லம் மற்றும் அரசு பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகளில் நேற்று ஆய்வு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இம்மாவட்டத்தில் மலைவாழ் பழங்குடியின மாணவிகள் கல்வி கற்பதற்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும் என்று அவர் கூறினார்.

இளம் வயது திருமணத்தால், பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாணவியரிடம் மாவட்ட நிர்வாகம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் திருமதி. குமாரி கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

சென்னை நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரி, இருபாலர் பயிலும் கல்லூரியாக மாற்றப்பட்டுள்ளது.

நடப்பு கல்வியாண்டின் இளநிலை பாடப்பிரிவுகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கிலும், தென்சென்னை மாணவிகள் பயனடையும் வகையிலும் இக்கல்லூரியை இருபாலர் கல்லூரியாக மாற்ற வேண்டுமென்று கல்லூரி கல்வி இயக்குநர், அரசுக்கு பரிந்துரை அனுப்பியிருந்தார்.

இதனை ஏற்றுக் கொண்ட உயர்கல்வித் துறை, நந்தனம் அரசு கலைக் கல்லூரியை இருபாலர் பயிலும் கல்லூரியாக மாற்றி உத்தரவு பிறப்பித்துள்ளது.

**>>>>><<<<<**

தமிழ்நாடு முழுவதும் இன்று ரேஷன்கடைகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது.

மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்காக கடந்த ஆண்டு, ஜூலை மாதம் 23ஆம் தேதியும், ஆகஸ்ட் மாதம் 4ஆம் தேதியும் கூடுதலாக ரேஷன்கடை ஊழியர்கள் பணிபுரிந்தனர்.

அதனை ஈடு செய்யும் வகையில் அனைத்து ரேஷன் கடைகளுக்கும் இன்றும், வரும் 20ஆம் தேதியும் விடுமுறை விடப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

ஜி-ஏழு நாடுகளின் உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக பிரதமர் திரு.நரேந்திர மோடி, இத்தாலி பிரதமர் திருமதி. **Giorgia Meloni**–யை நேற்று சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

பாதுகாப்பு துறையில் இரு நாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைத்து செயல்படுவது குறித்தும், இந்தியா - இத்தாலி உக்திசார் ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாகவும் இருவரும் விவாதித்தனர்.

பசுமை எரிசக்தி, உற்பத்தி துறை, விண்வெளி, அறிவியல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் வர்த்தக ரீதியிலான உறவுகளை விரிவுபடுத்துவது குறித்தும் பிரதமர் திரு. நரேந்திர மோடி இத்தாலிய பிரதமருடன் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

சர்வதேச மற்றும் மண்டல அளவிலான முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும், இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இந்தியா – மத்தியக்கிழக்கு – ஐரோப்பிய பொருளாதார வழித்தடம் குறித்தும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, திருமதி. **Giorgia Meloni**–யுடன் ஆலோசனை நடத்தினார்.

**>>>>><<<<<**

நாட்டு மக்கள் அனைவருக்கும் தரமான சுகாதார சேவைகளை வழங்குவதற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் முதல் 100 நாள் இலக்குகளை நிறைவேற்றும் வகையில் சுகாதாரத்துறையின் உயரதிகாரிகளுடன் நேற்று புதுதில்லியில் ஆலோசனை நடத்திய போது இதனை அவர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் தற்போதுள்ள சுகாதார கட்டமைப்புகளையும், அவற்றை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகளின் கருத்துக்களை அவர் கேட்டறிந்தார்.

பிரதமரின் மருத்துவ காப்பீட்டு திட்டம், தடுப்பு மருந்து திட்டம், விபத்து கால அவசர சிகிச்சை திட்டம் ஆகியவற்றை விரிவுபடுத்துவது குறித்தும் அதிகாரிகளுடன் அமைச்சர் திரு. நட்டா ஆலோசனை நடத்தினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் மீன்பிடி தடை காலம் நிறைவடைந்ததை அடுத்து, இன்று காலை தூத்துக்குடி மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

60 நாட்களுக்குப் பிறகு மீன்பிடிக்க செல்வதால், அதிக அளவில் மீன்கள் கிடைக்கும் என்று மீனவர் சங்கத்தலைவர் திரு. போஸ்கோ தெரிவித்தார்.

(சவுண்ட்பைட் - போஸ்கோ 19 செகண்ட்ஸ்)

இந்நிலையில், நாகை மாவட்டத்திலும் ஏராளமான மீனவர்கள், இன்று காலை விசைப்படகில் ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கான சாதனங்களுடன் புறப்பட்டுச் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் 43 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

திருப்பத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதி ஒன்றில் பதுங்கிய சிறுத்தையை வனத்துறையினர் 10 மணிநேர போராட்டத்திற்குப் பின்னர் மயக்கஊசி செலுத்தி பிடித்தனர்.

அந்நகரில் சாமநகர் பகுதியில் ஒரு வீட்டில் சிறுத்தை நடமாட்டம் இருப்பதாக வந்த தகவலை அடுத்து, வனத்துறையினர் அங்கு விரைந்து சென்றனர். அப்போது, அந்த வீட்டிலிருந்த சிறுத்தை தாவி, அருகில் உள்ள பள்ளி வளாகத்திற்கு சென்றது. பின்னர் அருகிலிருந்த தனியார் நிறுத்துமிடத்திற்கு சென்று, பதுங்கிக் கொண்டது.

நேற்றிரவு முழுவதும் வனத்துறையினர் கடுமையாக முயன்று சிறுத்தையை மயக்க ஊசி செலுத்தி பிடித்தனர்.

முன்னதாக, சிறுத்தை தாக்கியதில் படுகாயமடைந்த ஒருவர் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

கார் நிறுத்துமிடத்தில் இருந்த 5 பேரை வனத்துறையினர் பத்திரமாக மீட்டனர்.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

தென்னாப்பிரிக்க அதிபராக சிறில் ராமபோஸா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

>>>>><<<<<

சிக்கிம் மாநிலத்தில் மோசமான வானிலை காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டதால், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 15 பேரும், உள்நாட்டு சுற்றுலா பயணிகள் ஆயிரத்து 200 பேரும் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

தாம்பரம் - நாகர்கோவில் இடையே அதிவிரைவு சிறப்பு ரயில் நாளை, இரவு மணி 10.20-க்கு இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. மறுமார்க்கத்தில் இந்த சிறப்பு ரயில் நாளையும், திங்கட்கிழமையும் பிற்பகல் 3 மணிக்கு புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது கடைசி லீக் ஆட்டத்தில் கனடா அணியை எதிர்கொள்கிறது.

ஃப்ளோரிடாவில் உள்ள **Lauderhill-**நகரில் இப்போட்டி இன்றிரவு எட்டு மணிக்கு தொடங்கவுள்ளது.

ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி ஏற்கனவே 3 லீக் ஆட்டங்களில் அயர்லாந்து, பாகிஸ்தான், அமெரிக்கா என மூன்று அணிகளை தோற்கடித்து ஆறு புள்ளிகளுடன் சூப்பர்-8 சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

எனவே, கனடாவுடனான இன்றைய ஆட்டத்தின் முடிவு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

**Kingstown-**ல் தற்போது நடைபெற்று வரும் போட்டியில், நேபாள அணி வெற்றி பெற 116. ரன் என்ற இலக்கை தென்னாப்பிரிக்கா நிர்ணயித்துள்ளது.

முன்னதாக நேற்று அயர்லாந்து, அமெரிக்கா அணிகளுக்கு இடையேயான போட்டி மழை காரணமாக ரத்து செய்யப்பட்டதால், புள்ளிகள் அடிப்படையில் சூப்பர்-8 சுற்றுக்கு அமெரிக்கா தகுதி பெற்றதை அடுத்து, பாகிஸ்தான் அணி அந்த வாய்ப்பை இழந்தது.

**>>>>><<<<<**

இத்தாலியில் நடைபெறும் **Perugia** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் இன்று ஸ்பெயினின் **Bernabe Zapata-**வை எதிர்கொள்கிறார்.

**>>>>><<<<<**